மாற்றுவதற்கு மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதுமா? அந்தவிதமான எண்ணம் ஏதாவது இந்த அரசாங் கத்திற்கு உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தமாதிரியான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள், மத்திய அரசாங்கத்தில் வேலை பார்ப்பதற்காக இந்தியையும் இங்கு கற்பித்துக் கொடுக்கவேண்டும் என்று கூறுவார்களேயானல் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

* 374 கேள்வி.—**திரு. நெ. சா. இராமலிங்கம் (திரு. ஜே. மாதா கவுடர் சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தின் மக்கள் வாழ்க்கைச்செலவு (1) இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட, (2) மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத் தில் எத்தனை புள்ளி?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The cost of living index number for working classes for the Madras State was 106 at the beginning of the Second Plan, i.e., in 1956–57 and 134 at the beginning of the Third Plan, i.e., in 1961–62, with reference to the base year 1949.

Junior Colleges

* 375 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce a two-year course of Junior College Diploma in place of Eleventh Standard; and

(*b*) if so, the present stage of the proposal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The proposal is under examination.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் புதிய திட்டத்தின் விவரங்கள் என்ன? மத்திய ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பப் பட்ட யாதாஸ்து நிராகரிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படு கிறதே, அதனுடைய விவரங்கள் என்ன? அதன்மீது இப்போது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் மத்திய போர்டுக்கு அனுப்பப்பட்ட திட்டம்தான். இது முன்பே தயாரிக் கப்பட்டது. ஹையர் செகண்டரி கோர்ஸை எதில் வைக்க வேண்டும் என்று நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. ப்ரி-யூனிவர்சிட்டி கோர்ஸ் வேறு இருக்கிறது. இதை இரண்டு ஆண்டுப் படிப்பாக மாற்றவேண்டும் என்றும் திட்டம் இருந்து கொண்டிருக் கிறது. ஆனல் ஸென்ட்ரல் செகண்டரி போர்ட் இதை ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே இதை மீண்டும் நாம் பரிசீலனை செய்ய

[18th July 1962

வேண்டியிருக்கிறது. இப்போது இருப்பது போலவே இருக்கலாமா, அல்லது இதில் வேறு ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமா என்பதைப் பற்றி யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள், கல்வி சம்பந்தமான நிபுணர்கள் இவர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும். ஒருவேளை இப்போது இருப்பது போன்றே ப்ரீ-யூனிவர்ஸிட்டி கோர்ஸ் இருக்கலாம். இப்போது புதிதாக 11-வது ஸ்டான்டர்ட் கொண்டு வந்திருப்பதால் சில குழப்பங்கள் ஏற்படுவதாகவும் பத்திரிகையிலிருந்து தெரிகிறது. ஹையர் செகண்டரி கிரேட்டையும் ஹைஸ்கூலில் சேர்த்துவிடும்போது மொத்தம் கல்லூரிப் படிப்பு எல்லாம் சேர்த்து 16 ஆண்டுகள் ஆகிவிடும். இதைக் குறைக்கவேண்டுமா என்பதைப் பற்றியும் நாம் ஆலோசிக்க வேண்டும். இவைகளை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து சீக்கிரமாக முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இப்போது செகண்டரி ஸ்கூலில் 11-வது ஸ்டான்டர்டைச் சேர்க்கவேண்டும் என்பதை ஒத்திப் போட்டிருப்பதினால் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மாணவர்களும் இதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நிச்சயமாக, உறுதியாக ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தத் திட்டத்தின் மீது முடிவு எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிச்சயமாக நான் சொல்ல முடியும். உறுதியாக இந்த ஆண்டு இறுதிக்குள் இதற்கான முடிவு வந்துவிடும். ப்ரீ-யூனிவர்ஸிட்டி கோர்ஸ்-க்கு காலேஜ்களில் எல்லாம் இடம் போதவில்லை என்றும் விவரங்கள் கிடைத்தன. இதைப்பற்றி யூனிவர்ஸிட்டி அதிகாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். ப்ரீ-யூனிவர்ஸிட்டிக்கு என்று தனியாகக் கல்லூரியை ஏற்படுத்தலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இதன் மூலமாக ஓரளவுக்கு இட நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்று தோன்றுகிறது. ஆகவே இதைப்பற்றி எல்லாம் விரிவாகப் பரிசீலனை செய்து இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே முடிவு எடுத்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொள்ளலாம் என்று நான் நம்புகிறேன்.

திரு. சா. கணேசன்: ப்ரீ-யூனிவர்ஸிட்டி வகுப்புக் கலாசாலைகளில் எல்லாம் ஸயன்ஸ் சோதனைச் சாலைகள் எல்லாம் ஏற்படுத்துவதற்கு அதிகம் செலவு ஏற்படுவதாலும், இப்போது இருக்கக்கூடிய சோதனைச் சாலைகள் பல கல்லூரிகளில் இரண்டு மூன்று மணி நேரம்தான் பயன்படுகின்றன என்றிருப்பதினாலும், இப்போது புதிதாகக் கொண்டுவரப்படவிருக்கும் ஓராண்டு முறையோ அல்லது ஈராண்டு முறையோ, கல்லூரிகளிலே நடத்தினால் திறமையாகவும், பயனுள்ளதாகவும், சிக்கனமாகவும் இருக்கும் என்பதை அரசாங்கம் சிந்திக்குமா?

கனம் திரு எம். பக்தவத்சலம்: இந்தக் கருத்தை அரசாங்கம் பாராட்டுகிறது. இந்தப் புதிய திட்டத்தின்படி ஹையர் செகண்டரி வகுப்பைக் கல்லூரியில் ஏற்படுத்தலாமா என்றுதான்

18th July 1962]

அரசாங்கமும் சிந்தனை செய்கிறது. கல்லூரியில் இருக்கும் பல வசதிகளையும் இந்த வகுப்புக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக எல்லாக் கல்லூரிகளிலும் இப்போதே பி.யு.ஸி.-க்கு இட நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது. இதற்கென்று தனியாகக் கல்லூரி வைக்கலாம் என்றும் ஒரு கருத்து இருக்கிறது. டிகிரி படிப்பைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பதுதான் இப்போது நிலவுகின்ற அபிப்பிராயம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் புதிய திட்டப்படி வகுப்புக்கள் அமலுக்கு வருமானால் செகண்டரி கல்வி 10-வது படிப்போடு முடிவு அடையும். அப்படியானால், 10-வது வரை படித்திருந்தால், சாதாரணமாக அரசாங்க இலாகாக்களில் குமாஸ்தா வேலைக்கான யோக்கியதை போதுமானதாக இருக்குமா, அல்லது வேறு மாற்றி அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போதுள்ளபடி இருந்தால் 11 ஆண்டுகள் வரை செகண்டரி கல்வி இருக்கும், ஓர் ஆண்டு ப்ரீ-யூனிவர்ஸிட்டி கோர்ஸ், மூன்று ஆண்டு டிகிரி படிப்பு இவ்விதம் 15 ஆண்டுகள் ஆகின்றன. அரசாங்க உத்தியோகத்திற்கு 10-வது வரை இப்போதுள்ள முறைப்படி படித்திருந்தால் போதுமா என்பதைப்பற்றி எல்லாம் மற்றவர்களோடு கலந்து ஆலோசித்து முடிவு செய்யவேண்டும்.

திரு மீ. கலியாணசுந்தரம் : இப்போது அமைச்சர் அவர்கள் சொல்வது தெளிவாக இல்லை என்று நினைக்கிறேன். ஏற்கனவே 11 ஆண்டு படித்துவிட்டு ஜூனியர் கோர்ஸ் -இரண்டு வருடமும், பின்னால் மூன்று வருடம் டிகிரி படிப்பும் சேர்த்தால் 16 வருடங்கள் ஆகும் என்று எண்ணுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதனால்தான் ப்ரீ-யூனிவர்ஸிட்டி என்று இப்போது இருப்பதையே ஓராண்டுப் படிப்பாக வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை இருந்துவருகிறது. ஆகவே மொத்தம் 15 ஆண்டுகள்தான் ஆகும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்படியானால் இப்போதுள்ள திட்டம் பின்வாங்கப்படுமா ? அல்லது மாற்றி அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது முடிவாக ஒன்றும் சொல்வதற்கில்லை. இதைப்பற்றி பின்னால்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I request the Government to have first the Intermediate course and then the degree course in the colleges thus reverting to the old method?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just been explaining in reply to a supplementary question—which I am sure the hon. Member understands and follows—that if the High school

[18th July 1962

course is to be reverted to a 11-year course and if the degree course is necessarily to be not less than three years, that would mean not less than 14 years and it should not be extended to 16 years for the entire course. Necessarily we may have to consider having the Pre-University Course for only one year.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இப்போதே பி.யு.சி.-க்காக வந்த மனுக்களில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டு நிராகரிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இதைத் தவிர்த்து அனைவரையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் இன்று இருக்கக்கூடிய கல்லூரிகளிலேயே ஏதாவது ஷிப்ட் முறையைக் கொண்டுவந்து வகுப்புக்களை நடத்துவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

கனம் திரு எம். பக்தவத்சலம் : ஷிப்ட் முறை எந்த அளவுக்கு சாத்தியம் என்று சொல்வதற்கில்லை. இப்போது இருப்பதைவிட ஸீட்டுகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம்கூட, கும்பகோணத்தில் இடமில்லை என்ற விபரத்தை தெரிவித்தார்கள். அதற்கு யூனிவர்ஸிட்டிக்காரர்களோடு கலந்து பேசின பின்னால், ஒரு எக்ஸ்ட்ரா செக்ஷன் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தனியாக பி.யு.சி.-க்கென்று கல்லூரி வைப்பது என்பது சாத்தியப்படும் என்று நினைக்கிறேன். அதைப்பற்றியும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும்.

தலைமை ஆசிரியர்கள் (ஸ்தல ஸ்தாபன உயர்நிலைப் பள்ளிகள்)

***376 கேள்வி.—திரு எம். ஷண்முகம் (திரு இரா. நாராயணன் சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

ஸ்தல ஸ்தாபன நிர்வாகிகளின் கீழுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் வேலை செய்யும் தலைமை ஆசிரியர்களின் வேலைக் காலத்தை 55 வயதுக்குப் பிறகும் நீடிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to extend the age of retirement beyond 55 years. Headmasters are however allowed to be re-employed as Headmasters or as Assistants after the age of 55 years, subject to certain conditions.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கல்வி போதிக்கக் கூடியவர்கள் 55 வயது ஆகிவிட்டாலும் போதுமான திறமை, ஆற்றல், அனுபவம் எல்லாம் இருக்கிற காரணத்தினால் 58 வயதுவரையில் சர்விஸில் இருக்கலாம். இப்போதுகூட சிலருக்கு 58 வயது வரையில் விசேஷ அனுமதி கொடுத்து அவர்கள் சர்விஸில் இருக்கிறார்கள். சிலருக்கு மட்டும் விசேஷமாகக் கொடுப்பதை மாற்றி எல்லோரும் 58 வயதுவரையில் சர்வீஸில் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பார்களானால் அவர்களை வைக்காமல் 55 வயதுக்கு மேற்பட்டவர்களை வைப்பது சரியல்ல. பயிற்சி பெற்றவர்கள் இல்லையென்றால்